A/L 91
பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது

A/L 89
மாணவர்களுக்கு
வகுப்புகள் ஆரம்பமானதும்
பயிற்சிப் பரீட்சைகள்
நடைபெறும்;

PERSONAL
CLASSES
B. M. C FRONT LANE,
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 2/50

PERSONAL
CLASSES
B.M.C: FRONT LANE
JAFFNA

A/L 89, 90 & 91
வகுப்புகள்
நடைபெறுகின்றன;

PHY. சத்தியசீலன்
CHE. மதுரமணி
BOT. சர்வானந்தா
ZOO. சர்வேஸ்வரதாசன்
PURE. }
APP. } விஜயகுமார்

சுடர் 4 சுக்கில ஆண்டு ஸ்ரீ ஆவணி 06 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 19 (22-08-1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 223

★ நாடாளுமன்றக் கலைப்பு ★ தேசிய அமைச்சரவையிடம் பொறுப்பு

# தெற்குப் பிரச்சினையைத் தீர்க்க சிறிமாவின் மாற்று யோசனை!

## பிரேமா தலைமைக்கும் எதிர்ப்பு

புதுடில்லி, ஆகஸ்ட், 21

''உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும். சகல கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட காபந்து அமைச்சரவை ஒன்றை அமைத்து அதனிடம் சகல பொறுப்புக்களையும் ஒப்படைக்க வேண்டும் அந்த அமைச்சரவைக்கு திரு. ஆர். பிரேமதாஸா தலைமை வகிக்கக் கூடாது. அப்பதவிக்கு நியமிக்கப்படுபவரின் பணி தலைமை வகிப்பதுடன் முடிந்து விடவேண்டும். அவருக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப் படக்கூடாது''

...தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்த மாற்று யோசனை இதுவாகும்.

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இந்த மாற்று யோசனையை வெளியிட்டார்.

அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு:-

கேள்வி: அதிகாரத்துக்கு வந்தால் நீங்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்வீர்களா?

சிறிமாவோ: ஒப்பந்தம் பற்றிய எமது நிலை நன்கு தெரிந்ததே. ஒப்பந்தத்தை ரத்துச் செய்யத்தான் வேண்டும். ஆனால் அது சர்வதேச ஒப்பந்தமாகும். நினைத்த மாத்திரத்தில் அதை ரத்துச்செய்ய முடியாது.

அமைதிப் படையை 24 மணித்தியாலங்களில் திருப்பி அனுப்புவேன் என்று நான்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அல்வாய், வியாபாரிமூலையில் மோதல்! 10 பேர் உயிரிழப்பு!!

வல்வெட்டித்துறை, ஆக. 22

நேற்றுக் காலை 7. 30 மணியளவில் அல்வாய் மேற்கில் உள்ள மாணுண்டிச் சந்தைக்கு அண்மையில் உள்ள பூமாஞ்சோலையிலும் வியாபாரி மூலை நாவலடிச்சந்தியிலும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன. இந்த மோதல்களில் சூட்டுக்கு இலக்காகி பொதுமக்களில் பத்துப்பேர் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

பூமாஞ்சோலையில் உயிரிழந்தோர் விவரம் வருமாறு:-

● முருகுப்பிள்ளை சின்னத்துரை (வயது 65) ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், அல்வாய் மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்.

● சிவலிங்கம் சிவராசன் (ரங்கன்—வயது 22) அல்வாய் மேற்கைச் சேர்ந்தவர்.

● அருளானந்தம் சுதாகர் (வயது 20) அல்வாய் மேற்கு வாச்சாவத்தையைச் சேர்ந்தவர்.

நாவலடிச் சந்தியில் உயிரிழந்தோர்;-

● கதிர்காமத்தம்பி ரவீந்திரராசா (வயது 33) வியாபாரி, மூன்று பிள்ளைகளின் தந்தை.

● கதிர்காமத்தம்பி ராதாகிருஷ்ணன் (வயது 29) வியாபாரி. இவர்கள் இருவரும் சகோதரர்கள். பத்தை புலோலி நாவலடிச் சந்தியைச் சேர்ந்தவர்கள்.

● நாகமணி தில்லைநாதன் (வயது 34) வியாபாரி; நாவலடிச் சந்தியைச் சேர்ந்தவர்.

● வல்லிபுரம் சிவராசசிங்கம் (சுந்தவனம்) (வயது 40) மூன்று பிள்ளைகளின் தந்தை. கூலித் தொழில் செய்பவர். நாவலடிச் சந்தியைச் சேர்ந்தவர்.

● சிவக்கொழுந்து கந்ததாசன் (வயது 33), புசல்லாவை சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாண் ரூ. 3-60, மா ரூ. 9-40 புதிய விலைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக 22

மா, பாண் ஆகியவற்றின் விலைகள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

யாழ் உணவுத் திணைக்களத்துக்கு நேற்றுக் கிடைத்த உத்தரவையடுத்து விலைகள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டதாக உணவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிய விலைப்பட்டியல் வருமாறு:-

450 கிராம் நிறையுடைய பாணின் விலை மூன்று ரூபா 60 சதம்.

மாவின் உணவுக் களஞ்சிய விலை கிலோ 8-75 சதம். மொத்த விலை 8 ரூபா 95சதம் என்றும் சில்லறை விலை 9 ரூபா 40 சதம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருமலை பிரிமா நிறுவனத்தின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிலோ 8 ரூபா 50 சதத்திற்கும் தனியாருக்கு கிலோ 8 ரூபா 70 சதத்துக்கும் மா விநியோகிக்கப்படும். (உ-3)

## கலேவலவில் கண்ணி: அறுவர் உயிரிழப்பு!

கொழும்பு ஆகஸ்ட் 22

மத்திய மாகாணத்தில் கலேவெலயில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு கண்ணிவெடிச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் ஐந்து இராணுவத்தினரும், பொதுமகனான சாரதி ஒருவரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்த இராணுவத்தினரில் உயர் அதிகாரிகளும் அடங்குகின்றனர்.

படையினர் பயணம் செய்த ஜீப் நொருங்கி சிதறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## வவுச்சர்கள் கிடைத்தாலும் பென்ஷன் தாமதமாகலாம்!

யாழ் - மாவட்டத்துக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் இவ்வாரத்தில் ஓய்வூதியக்காரருக்கு கிடைத்தாலும் வங்கிப் டணக் கொடுப்பனவுகள் தாமதமாகலாம் என அறிய வருகிறது;

கொழும்பில் இருந்து வவுச்சர்கள் நேற்று யாழ்-செயலகத்துக்கு வந்து சேர்ந்ததை அடுத்து உரியவர்களுக்கு அவற்றை அனுப்பி வைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

ஓய்வூதியம் வழங்குவதற்கான நிதி முழுமையாக யாழ் அரசாங்க செயலகத்துக்கு வந்து சேராததால் கொடுப்பனவு தாமதமாகலாம் என நம்பப்படுகிறது. (ஒ-3 9)

### சுபநேரம்

(22 - 8 - 1989)

ஆவணி—6 செவ்வாய்க்கிழமை

நக்ஷத்திரம்: அச்சுவினி

சுபநேரம்:

10-35 முதல் 12 05 வரை

ராகுகாலம்:

03-05 முதல் 04 35 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்;

## செய்திச் சாரம்

### ஒரு மாதத்தில் 2,500பேர் கொலை

கொழும்பு, ஆக. 22

தென்பகுதியில் கடந்த ஜூலை மாதம் தொடக்கம் அரசியல் வன்செயல்களில் சுமார் 2 ஆயிரத்து ஐந்நூறு பேர் கொல்லப்பட்டனர்.

5 ஆயிரத்துக்கு அதிகமானோர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும் எம். பியுமான திரு. தினேஷ் குணவர்த்தன இத்தகவலை வெளியிட்டார். (உ-எ)

### 400பேர் கைது!

கொழும்பு, ஆக. 22

தென்பகுதியில் கடந்த 24 மணித்தியாலங்களில் 400பேர் கைது செய்யப்பட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயுதங்களும், வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

### ★ பரம ரகசியம்

கொழும்பு, ஆக 22

புதுடில்லியில் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நடத்திய பேச்சுக்களும் பின் திரு. பிரட்மன் வீரக்கோன் ஜனாதிபதிக்கு தெரிவித்த விவரங்களும் கொழும்பில் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

இப்படி உயர்மட்ட அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார். (உ-எ)

### 250 ஜவான்கள் திரும்பினர்

கொழும்பு, ஆக. 22

இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த சுமார் 250 பேர் நேற்றுப் பிற்பகல் காங்கேசன்துறையில் இருந்து சப்பல் மூலம் தாயகம் திரும்பினர். (ஒ-எ)

### திருமலையில் இன்று மாநாடு

வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச அதிபர்களுக்கான மாநாடு ஒன்று இன்று திருகோணமலையில் நடைபெற உள்ளது.

இம்மாநாட்டிற்கு பிரதிதிட்டமிடல் பணிப்பாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

### ரயில் சேவை முன்னேற்றமில்லை

கொழும்பு ஆகஸ்ட் 22

தென்பகுதி ரயில்சேவையில் முன்னேற்றம் காணப்படவில்லை என்று ரயில்வே கட்டுப்பாட்டுத்திணைக்களம் நேற்று அறிவித்தது. (உ-எ)

### அரச அதிபர் முதலாம் திகதி பதவி ஏற்பு

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ்-அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ள திரு. எஸ். தர்மபாலன் எதிர்வரும் முதலாம் திகதி தமது பதவியைப் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது

டிசம்பர் மாதத்துடன் அவர் ஓய்வு பெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

### வேட்டுச் சத்தம்

வல்வெட்டித்துறை. ஆக 22

வல்வெட்டித்துறை ஊரிக்காடு இந்திய இராணுவ முகாம் பகுதியில் நேற்றுக் காலை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. (ஒ-160)

### பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 22

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரண்டாம் வருட மாணவர்கள் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

கடந்த ஞாயிறன்று பலாலியில் வைத்து விஞ்ஞான பீட இரண்டாம் வருட மாணவனை லவா நவரட்ணசிங்கம் கூட்டிச் செல்லப் பட்டதை ஆட்சேபித்தும்— அவரை விடுவிக்கக் கோரியும் நேற்றைய பகிஷ்கரிப்பு இடம் பெற்றதாகக் கூறப்பட்டது.

பல்கலைக்கழக நிர்வாகமும் பிரஸ்தாப மாணவர்களின் விடுதலை தொடர்பாக முயற்சிகளை மேற்கொள்வதாகவும் கூறப்பட்டது. (ஒ)

### தம்பசிட்டியில் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஆக 22

நேற்றுக்காலை பருத்தித்துறை தம்பசிட்டியில் இந்தியப் படையினருடன் நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டயஸ் (கந்தசாமி- ஆரியாலை) உயிரிழந்தார்.

நேற்று மாலை உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாட்டின் கொள்கை வகுக்கும் வேலையிலிருந்து

## என்னை ஓரம் கட்டிவிட்டார்களா? இல்லை; நானே வெளியேறி விட்டேன்!

### அமைச்சர் காமினி கூறுகிறார்

கொழும்பு, ஆக. 22

நாட்டின் கொள்கை வகுக்கும் நடைமுறையில் இருந்து நான் ஓரம் கட்டப்பட்டு (Marginalised) விட்டேன் என்று கூறமுடியாது: ஆனால் கொள்கை வகுக்கும் பணியில் இருந்து நான் முற்றாகவே வெளியே வந்து விட்டேன் என்று சொல்லலாம்;

அமைச்சர் காமினி திஸநாயக்கா கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது.-

நாட்டின் தற்போதைய பொதுவான நிலை குறித்து நான் மகிழ்ச்சியடையவில்லை. யார்தான் மகிழ்ச்சியடைவார்கள்?

கேள்வி: பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருந்திருப்பின் நீங்கள் இந்த நிலைமையைச் சமாளிக்க என்ன செய்திருப்பீர்கள்?

காமினி: வெளியில் இருந்து கருத்துக்கூறுவது கஷ்டமான காரியம். தீர்மானம் எடுக்கும் நடைமுறையில் சம்பந்தப்படாமல் அது சம்பந்தமாக ஆலோசனை கூறுவதும் கஷ்டமான காரியமே,

தோட்டத் தொழில்துறை பற்றி மட்டுமே நான் பேச முடியும்: அது தொடர்பாக நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன்—என்றார். (உ-எ)

### முச்சந்தி முரளி



ஓரம் போ... ஓரம் போ... என்டு பாடுவினம் போலை...!

## ஜே.வி.பி.தாக்குதலை நிறுத்தும்வரை இராணுவ நடவடிக்கை தொடரும்!

கொழும்பு, ஆக 22

மக்கள் விடுதலை முன்னணி தனது தாக்குதல்களை நிறுத்தும்வரை இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடரும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்;

தன்னைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்திய தூதுக்குழுக்களிடம் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

முதலில் மக்கள் விடுதலை முன்னணி தனது தாக்குதல்களை நிறுத்த வேண்டும்; அது

### ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவிப்பு

வரை இலங்கை இராணுவத்தின் தாக்குதல்கள் நிறுத்தப் படமாட்டா.

ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு பேச்சுக்கள் நடத்த ஜே. வி. பி. முன் வந்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவதற்கு ஏதுவான அரசமைப்புச்சட்டத்தை திருத்துவது பற்றி ஆராயவும் நான் தயாராக இருக்கின்றேன்.

- இப்படி ஜனாதிபதி அக்குழுக்களிடம் தெரிவித்தார் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன (உ-எ)

### உயரதிகாரிகள் வேலைக்கு வரவில்லை

கொழும்பு, ஆக 21

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள்' வங்கிகள் ஆகியவற்றின் தலைவர்கள் நேற்றுமுதல் பதவி துறக்க வேண்டும் என்ற ஜே. வி. பி. யின் கோரிக்கையை அடுத்து கொழும்பில் உயர் அதிகாரிகள் பலர் நேற்று வேலைக்குச் சமூகம் அளிக்கவில்லை. (இ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

Lister Engine எந்த நிலையிலும் உடன் தேவை. தொடர்பு: விஜயன், 11/5, செம்ம வீதி, (சாமுவேல் & சன்ஸ் அருகாமையிலுள்ள ஒழுங்கையில்) முத்திரைச் சந்தி, நல்லூர். (1567)

நன்கு அனுபவம் உள்ள சமையல் வேலை செய்யக்கூடியவர்களும், சப்ளை செய்யக் கூடியவர்களும் தேவை. மலையகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் விரும்பத்தக்கது. நேரில் வரவும் கோட்டல் ஜேலக்ஸ் 340,/ ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1656)

### வாடகைக்குத் தேவை

சங்கானை மின்தறி நெசவாலைக்கு, 20 K. V. A., 3 Phase மின் இயந்திரம் (ஜெனரேற்றர்) வாடகைக்கு உடன் தேவை. தொடர்பு- மின்தறி நெசவாலை T.C. ஒழுங்கை, சங்கானை. (1657)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள நீர் இறைக்கும் இயந்திரம் (வில்லியஸ் -12) உடன்விற்பனைக்கு உண்டு. இளையதம்பி — இராசேந்திரம் (கிளி) பாரதிலேன, நாயன் மார்கட்டு, நல்லூர். (1568)

G. C. E. O/L விண்ணப்பப் படிவம், பிறப்பு, இறப்பு, விண்ணப்பப் பத்திரம், ஆசிரியர் தேர்வுக்கான பொது அறிவுப்புத்தகம், மாணவருக்கான பயிற்சிப் புத்தகங்கள் யாவும் பெற பிக்மென்ஸ் 'B' (சிங்கர் கொம்பனிக்கு முன்) கண்டி ரேட், கிளிநொச்சி. (1671)

நல்ல நிலையில் உள்ள வீடியோ,கமரா நாஷனல் "NATIONAL - 100" விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வதா ரேட் சென்ரர், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (1658)

National G 1 (Genlock) Panasonic A 2 வீடியோகமரா விற்பனைக்கு உண்டு. பாரத் வீடியோ சென்ரர், 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (1561)

+

## இறைவனில் இணைந்த 6 ஆம் ஆண்டு



எம் நெஞ்சகலாத் தங்கமுதே நிர்மலனடி நிதம் வாழ்வீர்

**சுவக்கீன்பிள்ளை பத்திநாதர் (சின்னத்துரை)**

தாயின் மடியில்: 06- 04- 1918

ஆண்டவன் அடியில்: 24- 08- 1983

இவரின் ஆன்ம சாந்திக்காக 24- 08- 89 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

சென்ஜேம்ஸ் வீதி, சில்லாலை. (1660)

### காணி விற்பனைக்கு

அச்சுவேலி பத்தமேனியில் தென்மூலையில் அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு பின்புறமாக வீடு கட்டக்கூடிய காணி 2 பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள், அ. பிரான்சிஸ் சேவியர், 37, பெரிய தம்பனை, மடுக்கோவில் அல்லது, த. முத்தராசா குடியிருப்பு, வவுனியா. (1572)

### விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மண்டேலா ரேடர் [புத்தகசாலை] இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [1551]

### தவறிவிட்டது

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் 491201797 V என்ற இலக்கமுடைய G. அரசரத்தினம் ஆகிய எனது அடையாள அட்டை கைப்பையுடன்தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (1573)

16 8-89 அன்று யாழ்ப்பாணம் அராலிக் கிடையில் J 0156363 இலக்க பாஸ்போட் மற்றும் பொருட்களுடன் கைப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில ஒப்படைக்கவும். பகுந்த சன்மானம் வழங்கப்படும். (1669)

### A/L இரசாயன

108 Brown Road, A/L 90, A/L 91 இரசாயன வகுப்புக்கள். ஆசிரியர்: சதீஸ், ஆரம்பம்: 25-08-1989 புதன் முதல். (1667)

### A/L இரசாயன நூல்

ஆசிரியர் சதீஸ் அவர்களின் பின்வரும் நூல்கள் வெளியாகி உள்ளன. அடிப்படை இரசாயனம் பகுதி I, அடிப்படை இரசாயனம் பகுதி II, சேதன இரசாயனம் பகுதி II புத்தகசாலைகளில் கிடைக்கும். நேரில் பெறுவோர்க்கு விசேட கழிவு உண்டு. (1668)

### புலமைப் பரிசில் பரீட்சை ஆண்டு 5

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (எட்டாவது) 27 - 08 - 89 ஞாயிறு 10 - 30 மணி 1 - 30 மணி நேரங்களில் நடைபெறவுள்ளது. பதிவு செய்யவும். நடந்தேறிய பரீட்சை விடைத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம்; புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (1670)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

[Cobb] புறொயிலர் குஞ்சுகள் (23 - 08 - 89) புதனும் (Dekalb) பிறவுண் பேடுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் (30 – 08 - 89) புதனும் விநியோகிக்கப்படும். (தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு:- எங்கள் குஞ்சுகளுக்கு இரவில் லைட் அவசியமில்லை. (1606)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா உத்தரவாதம் உடைய ஒருநாள் லோமன் இன புறொய்லர் குஞ்சுகள் ரூபா 15/ 50, வெள்ளை ரூபா 16/ 00 பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13/ 50, ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. கால்நடை உணவுகளுக்கும்எம்மை நாடுங்கள். ஸ்ரீ கிருஷ்ணா ஓயில் ஸ்ரோர்ஸ் 802, பலாலிவீதி, திருநெல்வேலிச் சந்தி. (1372)

### Matrimonial

Jaffna Vellala Catholic Parents Seek Suitable partner for pretty looking steno daughter aged 29 yrs. Accountants prefered substantial dowry available hindus also considered. Mangala Agency, Jaffna. SriLanka. (1673)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 23 ஆம் திகதி புதன் கிழமையும், Hybro புறொயிலர் குஞ்சுகள் 24 ஆந் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1672)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்:

பௌதீக இரசாயனவியல் பேராசிரியர்

இரசாயனவிய சிரேட்ட விரிவுரையாளர் தரம் I

பௌதீகவியல் சிரேட்ட விரிவுரையாளர் தரம் II

மருந்தியல் சிரேட்ட விரிவுரையாளர் / விரிவுரையாளர்

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1989. 11. 17. ஏனைய பதவிகளுக்கான முடிவுத் திகதி 1989. 09. 17.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களும் விவரங்களும் இப்பல்கலைக் கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23 × 10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படலாம்.

- பதில் பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், 1989. 08. 11. (சி/3530)

## அஞ்சலிக்கூட்டம்

கரவெட்டி ஆக 22

"பாடசாலை ஆசிரியர்கள் தமது கடமையுணர்வால் மட்டுமல்ல, வாழ்க்கை நடைமுறையாலும் மாணவர்களை வழி நடத்த வேண்டும் அமரர் க, அம்பலவாணர் இளம் சமுதாயத்திற்கு நல்வழிகாட்டிய ஆசான் ஆவார்".

அண்மையில் காலம் சென்ற அல்வாய்சின்னத்தம்பி வித்தியாலய ஆசிரியர் க. அம்பலவாணரின் அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய பாடசாலை ஆசிரியர் திரு. செ. செல்வராசா மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. ஞானச்சந்திரனும் திரு பன்னீர்ச் செல்வமும் அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்கள். (க-70

## திருவடி வழிபாட்டின் பெருமை

'இறைவனது திருவடியை நாம் ஏன் வணங்கவேண்டும் என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்கு தெரிந்திருக்கவேண்டும். ஒவ்வொருவரும் திருவடிப் பேறுபெற்று இறையருள் பெறுவதை உணர்த்தும் வகையில்திருவடி வழிபாட்டை எமக்கு விளக்கியுள்ளனர் பெரியோர்கள்.

இவ்வாறு சத்சங்க வட்டப் பிரார்த்தனையில் கலந்து அருளை வழங்கிய ஆசிரிய சிரோன்மணி திரு. இ. அப்பாத்துரை கூறினார்.

பிரார்த்தனை ஆலடி வைரவர் ஆலயத்தில் நடைபெற்றது. (இ-28)

## யா/ வேம்படி மகளிர் கல்லூரி
## அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

எதிர்வரும் செப்டெம்பர் 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 30 மணியளவில் மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் 'மேபல் தம்பையா மண்டபத்தில்' நடைபெற உள்ளது. பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரும் தவறாது சமூகம் அளிக்கவும்.

— தலைவர்

அதிபர்
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம். (1581)

## பதவி வெற்றிடம்

### பத்திரிகை விநியோகம் செய்வோர்


தீவுப் பகுதிக்கு உதயன்/ சஞ்சீவிப் பத்திரிகைகளை 292/2, நாவலர் வீதியிலுள்ள உதயன் அலுவலகத்திலிருந்து எடுத்துச் சென்று தீவுப்பகுதி முகவர்களின் கடைகளுக்கு விநியோகஞ் செய்வதற்கு ஊர்காவற்றுறை/ வேலணைப்பகுதியில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

அ. 30 வயதிற்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும்.
ஆ. மோட்டார் சைக்கிள் C. 50 அல்லது C. 90 வைத்திருப்பவராயிருத்தல் வேண்டும்.
இ. பிணைப்பணங் கட்டக் கூடியவராயிருத்தல் வேண்டும்.
ஈ. இத் தொழிலில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத் தக்கது.

முகாமையாளர் (ஆளணி/ நிர்வாகம்)
நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


## DIPLOMA IN COMPUTER PROGRAMMING

வார இறுதி வகுப்புக்கள்
சனி, ஞாயிறு காலை 7. 15 — 8. 15 மணி
ஆரம்பம்: 26. 08. 1989

வாரநாட்கள் வகுப்புக்கள்
வியாழன், வெள்ளி மாலை 4. 15 — 5. 15 மணி
ஆரம்பம்- 24 08- 1989

Digital Computer Consultants
(காசிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்)
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பளை. (1678)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்!



தோற்றம்: 06 - 12 - 1964

மறைவு: 18 - 08 - 1988

திதி: 22 - 08 - 1989

அமரர் செல்வன்

**நவரெட்ணம் விக்னேஸ்வரன் (விக்கு)**

எம் அன்புச் செல்வமே!
எம் ஆசை அண்ணவே!!
எம்மை ஏற்றமுடன் வாழவைக்க
ஏகினீரே வெளிநாடுதனை
இதயத் துவாரம் எனும் கொடிய நோயினால்
இயமனுடன் வானுலகு சென்றாயே!
நண்பர்களை நம்பியிருந்தாயே
நட்டாற்றில் கைவிடப்பட்டாயே!
ஆண்டு ஒன்றுதான் ஆனாலும்
ஆறுது அண்ணா எம்மனது!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
பெற்றோர், சகோதரர்
உறவினர்: நண்பர்கள்:

திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். [1576]

கண்ணீருடன் நினைவு கூருகின்றோம்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவலோகேஸ்வரி சிவதாசன்**

ஜனனம்: 16- 09- 1943    மரணம்: 32- 08- 1987

திதி: 29- 08- 1989

"எங்கள் இதயத்தின் இறுதித்துடிப்புள்ள வரை உங்கள் நினைவுகள் எங்களுடன் இருக்கும்"

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
என்றென்றும் அன்புடன்
கணவர், மகள், உறவினர்.

கோப்பாய் வீதி,
உரும்பராய். (சி/3528)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

**குறள்**

நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட் டியற்று.

பொருள்:

மனத்தில் நாணம் இல்லாதவர் உலகத்தில் இயங்குதல் மரத்தால் செய்த பாவையைக் கயிறு கொண்டு ஆட்டி உயிருள்ளதாக மயக்கினாற் போன்றது.

உதயன்

இல. 392/2, நாவலர் வீதி, தொலைபேசி 24802 23078
யாழ்ப்பாணம்:
22 - 08 - 1989 த. பெ. இல. 11

# கலையறிவு பெருக்க வழி

கலைஞர்கள் தமது கலைத்துறை அனுபவங்களை, கலைத்துவத் தொழில் நுணுக்கங்களைப் பிறர் அறியும் வண்ணம் நூல் வடிவில் வெளியிட வேண்டும். தாம் உயிரோடு இருக்கும் போதே அந்தப் பணியைச் செய்திட வேண்டும்.

இவ்வாறு ஆலோசனை வழங்கி இருக்கிறார் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா. இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் நடைபெற்ற மிருதங்க வித்துவான் அ. நா. சோமஸ்கந்த சர்மா எழுதிய "மிருதங்க சங்கீத சாஸ்திரம்" எனும் நூல் வெளியீட்டு விழாவில் வைத்து இந்தக் கருத்தை முன்வைத்திருக்கிறார் துணைவேந்தர்.

ஒரு சமூகத்தின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பதில் அந்தச் சமூகத்தின் கலைகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆகையால் கலைகள் அழியாமல் பேணப்படுதலும், வளர்க்கப்படுதலும் அவசியமாகின்றன.

கலைகளை வளர்த்தல் அல்லது பேணுதல் என்பது கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் அளிக்கும் ஊக்குவிப்பையும், ஆதரவையும், வசதிகளையும் பொறுத்ததே. கலைஞர்கள் வாழ்ந்தால் தான் கலைகள் வாழ முடியும், வளர இயலும். கலைஞனுக்குச் சமூகத்தில் உரிய மதிப்பு இருக்க வேண்டும். அவனது கலையை ரசித்த ஆதரவு நல்க வேண்டும். அவற்றினால்தான் கலைஞர்களை வாழவைக்க முடியும்.

கலைகள் அழியாமல் பேணப்படுவதற்கும், வளர்க்கப்படுவதற்கும் கலைஞனுக்கும் கடமைகள் இல்லாமல் இல்லை. கலைஞர்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள் என்று எவ்வாறு சமூகத்துக்கு உள்ளனவோ, அதே போல, கலைஞர்களுக்கும் சமூகத்துக்கு இயற்ற வேண்டிய கடமைகள் உள்ளன.

தமது கலை ஞானத்தை, கலை ஆற்றலை, கலைத்திறமையை அவர்கள் தம்மோடு — தமக்குள் — கட்டி வைத்துக் கொண்டிருக்கக் கூடாது தமக்குத் தெரிந்த கலையை, தாம் கற்ற கலையை, தமக்குள்ள அனுபவங்களை மற்றவர்களுக்குப் பயிற்றுவிப்பதன் மூலம் பகிர்ந்தளிப்பதன் மூலம் கலை வளர்ச்சிக்கும் கலைப் பேணுதலுக்கும் உதவவேண்டும். கலை தமக்குத் தனித்தே உரித்தான சொத்து, அதனை மற்றவர்களுக்கும் பயிற்றுவித்தால் அவர்கள் தங்களைவிடத் திறமைசாலிகள் ஆகிவிட்டால் தமது மதிப்புக் குறைந்துவிடுமே என்று நினைத்திருக்கக்கூடாது. கலையும் கல்வியைப் போன்றதே. அள்ளி அள்ளி வழங்க வழங்க குறைவில்லாது சுரக்கும் ஊற்று.

கலைகளைப் பயிற்றுவித்தல் என்பதில், கலைஞன் ஒருவன் தனது அனுபவங்களையும், அனுபவத்தின் மூலம் தாம் திரட்டிய தொழில் நுணுக்கங்களையும் கலையார்வம் உள்ளவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதும், அல்லது காட்டிக் கொடுப்பதும் அடங்கும். வெறும் வாய்ச் சொல்லால் அல்லது செய்கையால், ஒரு சிலருக்கு மட்டும் கலையைப் பயிற்றுப்பதைவிட: நூலாக வெளியிடுவதால் பலருக்குக் கலை அறிவை ஊட்டலாம்.

அந்தக் கலையறிவு, சம்பந்தப்பட்ட கலைஞனுடன் அழிந்து போகாமல் தலைமுறை தலைமுறையாக நீண்டு நிலைத்துப் பல சந்ததியினருக்கு உதவும். காலாகாலமாகப் பலருக்குக் கலையறிவு ஊட்ட வகை செய்து கலையைப் பேணச் செய்யவும், வளர்க்கவும் உதவும்.

கலைஞர்களது பொருளாதார நிலையில் அவர்களால் தனித்து நூல்களை வெளியிட முடியும் என்பது சாத்தியமற்றது. அந்தப் பணியில் அவர்களை ஊக்கமளிக்க கலாசார நிறுவனங்களும், பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களும், அரசாங்கமும் முன்வந்து உதவ வேண்டும்.

பலரும் விரும்பிப் படிக்கும் விடயங்கள் அடங்கிய நூல்களே விலைபோகாமல் இருக்கும் எமது சமூகத்தில், கலையறிவு சம்பந்தமான நூல்களை எத்தனை பேர் வாங்குவார்கள் என்ற பிரதான கேள்வி ஒன்று எழாமலில்லை. கலையார்வமும், கலையறிவுத் தாகமும் எமது மத்தியில் வளரும் வரை அந்தக் கேள்வி இருக்கவே செய்யும். அதனை முயற்சியின் மூலம் படிப்படியாகவே நீக்க இயலும்.

நல்லூர் உற்சவகால அருட்பிரசங்கம்

## நல்லை நகர்க் காவலனே!

ராகம்: தோடி தாளம்: ஆதி

எடுப்பு

தொல்லை வினை தீர்க்கும் வேலவனே
நல்லை நகர்க் காவலனே கந்தனே
— தொல்லை

தொடுப்பு

கல்லை யொத்த மனமும் கரைந்துருக நீ
இல்லை யெனாது வரம் ஈந்தருள்வாய்
— தொல்லை

முடிப்பு

கலியுக வரதனே கண்கண்ட தெய்வம் நீ
நலிவுறாது என்றும் நல் வாழ்வு நாம் வாழ
சலியாத மனம் தந்து சண்முகனே காப்பாய்
வலிதாக நீ வந்து வண்ணமயில் மீதிவர்ந்து
— தொல்லை

— இராசையா ஸ்ரீதரன்
(இன்று நல்லைக் கந்தன் 17 ஆம் திருவிழா)

## கோவில் திருடன் பிடிபட்டான்

அச்சுவேலி, ஆகஸ்ட் 22

ஆவரங்கால் சிவன் கோவிலுக்குள் புகுந்து ஆலயத்திற்குச் சொந்தமான ஒலிபெருக்கி இணைப்புகளையும் ஆலய திருப்பணிச் சபை பற்றுச் சீட்டுகளையும் திருடினார் என்று கூறப்படும் ஒருவர் யாழ்நகரில் பொருள்களை விற்பனை செய்யும்போது பிடிபட்டார்; பொருள்களும் மீட்கப்பட்டன.

இந்தப் பேர்வழி 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி இணைப்புக்களை யாழ் நகரில் விற்பனை செய்ததுடன் திருப்பணிச் சபையின் பற்றுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி ஆலயத்தின் பேரில் திருப்பணி நிதியும் சேகரித்தபோது பிடிபட்டார் என்று கூறப்படுகிறது. (க-11)

## 5 மீனவர்கள் விடுதலை

கொழும்பு, ஆக 22

மாலைதீவு கடலில் சட்டவிரோதமாக மீன் பிடித்த 5 நீர்கொழும்பு மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அந்த 5 மீனவர்களுக்கும் மன்னிப்பு வழங்கி மாலைதீவு அரசு விடுதலை செய்துள்ளது. படகும் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ஓ)

மட்டக்களப்பில் குழப்பப்பட்ட ஆசிரியர் நேர்முக பரீட்சை:

# மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படுதல் வேண்டும்

## பிரதிக் கல்விப்பணிப்பாளர் கருத்து

மட்டக்களப்பு: ஆக 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் 25,000 ஆசிரியர்கள் பயிலுநர்கள் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற வேண்டுமானால் மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படவேண்டும்.

இத்தகவலை மட்டக்களப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. நேர்முகப்பரீட்சைக்குழுவில் இடம்பெற்றிருந்தோர் இனிமேல் தொடர்ந்து இடம்பெறமுடியாது என மறுத்துவிட்டார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் நேர்முகப்பரீட்சை நடாத்த எம்மால் முடியாது என்று கல்விச் சேவைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார். (க-22)

கொட்டடி

## நமசிவாய வித்தியாசாலை கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஆக: 22

யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் புதிய மேல்மாடிக் கட்டடத்தின் திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

இலங்கையில் உள்ள நோர்வே றெட்பானா உயர் அதிகாரிகளும், கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளும் மற்றும் பெற்றோரும் பழைய மாணவர்களும் இவ் விழாவில் கலந்து கொள்கிறார்கள்.

இந்தப் புதிய மாடிக் கட்டடம் றெட்பானா நிறுவனத்தின் உதவியுடன் கட்டியமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## அரிசிவிலை அங்கும் உயர்வு

வட்டக்கச்சி, ஆக 22

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது திடீரென அரிசியின் விலை அதிகரித்துள்ளது.

மின் துண்டிப்பாலும் ஆலைகள் இயங்காததாலும் வெளியிடங்களில் இருந்து அரிசியைக் கொண்டுவருவதாலும் ஜெனரேட்டர்மூலம் மின் இயங்குவதாலுமே இவ் விலை ஏற்றம் என்று அறியப்படுகிறது. (க-163)

## பிரெஞ்சு வைத்தியர்களின் கண் கிளினிக் செப்: 5 இல்

சரவெட்டி, ஆக 22

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பிரெஞ்சு வைத்தியக் குழுவினரின் கண் வைத்திய கிளினிக் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை மாவட்ட அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

இதற்கென பிரெஞ்சுக் குழுவுக்கு கண் சத்திர சிகிச்சை நிபுணர் சிலநாட்களில் வந்து சேரவுள்ளார்.

கடந்த மேமாதம் இக்குழுவினால் நடத்தப்பட்ட கண் வைத்திய பரிசோதனைகளின் போது கண் சத்திரசிகிச்சைக்குப் பரிசோதனை செய்யவேண்டும் எனத் தொடர்புடடுத்தப்பட்ட கண் நோயாளிகளும் இக்கிளினிக்குக்கு வரலாம் என்று தெரியவருகின்றது. (க-70)

## பொன்விழா

காரைநகர் ஆக 22

காரைநகர் மணிவாசகர் சபையின் 50 ஆவது ஆண்டு பொன்விழாவை எதிர்வரும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் நான்கு நாட்கள் கொண்டாடுவது என்று இச் சபையின் நிர்வாகக் குழு தீர்மானித்துள்ளது.

"சைவ மணம்" என்னும் சிறப்பு மலரையும் வெளியிடுவது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (க-73)

## எரிகாயமுற்ற குழந்தை

கோப்பாய், ஆக 22

பெற்றோல் தீப்பிடித்து கோப்பாய் வடக்கைச் சேர்ந்த ஒரு வயது நிரம்பிய ஆதிரை என்னும் பெண் குழந்தை எரிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. (க-72)

## இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர் மேல் முறையீடு செய்யலாம் என ஆலோசனை

அச்சுவேலி ஆக. 22

கல்வி மாவட்டங்களுக்கிடையே இடம் மாறுவதற்கு உரிய தகுதியைப் பூர்த்தி செய்து உரிய முறையில் விண்ணப்பித்து இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர்கள் கல்விச் சேவைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்யலாம்;

"மாவட்டங்களிடையே இடம் மாறுவதற்கு உரிய தகுதியைப் பூர்த்திசெய்து கடந்தவருடம் மாவட்ட இடமாற்றத்துக்கு விண்ணப்பித்து இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர்கள் இதுபற்றிய விவரங்களை உள்ளடக்கி தமது மேல் முறையீட்டு விண்ணப்பத்தை கல்விச் சேவைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறும் - அதன் பிரதியை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு: த. மகாசிவம் தெரிவித்தார் (இ-11)

## திருவுருவப்பட திறப்புவிழா

அகில இலங்கை கச்சியப்ப சுவாமிகளின மன்றம் நடத்தும் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் திருவுருவப் படத் திறப்பு விழா 26 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடை பெறும். (அ)

## வீதியின் நிலை

எழுதுமட்டுவாள் - நாகர் கோயில வீதி குன்றும் குழியுமாக உள்ளதால் இவ்வீதியில் போக்குவரத்து செய்வது பெரிதும் கஷ்டமாக உள்ளது.

## பொலீஸ் குடும்பங்களுக்கு பாதுகாப்பு வழங்க பணிப்பு

கொழும்பு, ஆக 22

தீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து தப்ப பொலீஸாரின் குடும்பங்களுக்கு போதுமான பாதுகாப்பு வழங்கும்படி பிரதேச பொலீஸ் அதிபர்களை பொலீஸ் மா அதிபர் பணித்திருக்கிறார்.

பாதுகாப்பு வழங்குவதற்குத் தேவைப்படும் பட்சத்தில் தனியார் கட்டடங்களைப் பொறுப்பேற்கும் அதிகாரமும் பொலீஸ் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது:

பொலீஸாரின் குடும்பங்கள் ஓரிடத்தில் வைக்கப்பட்டு அவற்றிற்கு பாதுகாப்பு வழங்கப்படும்;

இதே வேளை —

தென்பகுதியில் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் பொலீஸ் அதிகாரிகளின் குடும்பங்கள் வசிக்கும் வீடுகளுக்குச் சென்று மேற்படி அதிகாரிகள் பொலீஸ் சேவையில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என்று எச்சரிக்கின்றனராம்.

பாடசாலைகளைப் பொறுப்பேற்று அவற்றில் இராணுவத்தினரின் குடும்பங்களை வைத்துப் பராமரிக்க இராணுவம் நடவடிக்கை எடுத்து வருவதாக அறியப்படுகிறது.

## நேர்முகப்பரீட்சை

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் பயிலுநர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த 17 ஆம், 18 ஆம் திகதிகளில் பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. (க-117)

## இந்தியத் தமிழர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஆக 22

மாத்தளை உக்குவலையில் கடந்த வியாழக்கிழமை இந்தியத் தமிழர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் செட்டியார் [illegible] ராவர். (ஓ-21)

## சமய சந்நிதிகளில்

### நல்லை ஆதீன பீடாரோகண விழா

யாழ்ப்பாணம், ஆக: 22

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 23 ஆவது ஆண்டு பீடாரோகண விழா நாளை புதன்கிழமை நடைபெறும். (க)

### ஆரோக்கிய நாதர் பெருவிழா

குருநகர், ஆக. 22

யாழ்ப்பாணம், கடற்கரை வீதி - புனித ஆரோக்கிய நாதர் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 30 மணிக்கு நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தினமும் மாலை 5.45 மணிக்கு ஆராதனை, தியான உரை, திருப்பலி என்பன நடைபெறும்.

26 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நற்கருணை ஆராதனை திருப்பலி இடம்பெறும்.

27 ஆம் திகதி காலை 6 30 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். மாலை 5 00 மணிக்கு புனிதரின் திருச்சொரூப பவனி நடைபெறும்.

மாலை 6 00 மணிக்கு நற்கருணை ஆராதனை, ஆசிர்வாதத்தை அடுத்து திருச்சொரூப ஆசீர்வாதம் நடைபெறும்.

வெளியூர் யாத்திரிகர் தங்குமிட வசதிகளை ஆலய பராமரிப்புச் சபையினர் ஒழுங்கு செய்துள்ளனர். (இ-51)

## காரைநகர் ம. வி. 100 ஆண்டு விழா

காரைநகர், ஆக. 22

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகளாக ஒரு மலரை வெளியிடவும், புதிய கட்டடம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்படுகின்றது. (க-73)

## கண்டதும் கேட்டதும்

"நாம் நிலத்துக்குக் கீழ் எலிகளைப் போல் வாழ்கின்றோம். இரவும பகலும் மறைவிடங்களில் பதுங்குகிறோம்."

"நாம் வெளியேற முயற்சிக்கிறோம். எமக்கு விசா தரும் எந்த ஒரு நாட்டுக்கும் போக நாம் தயார்."

கடந்த 14 வருடகால உள்நாட்டு யுத்தத்தால் சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருக்கும் லெபனானின் தலைநகரான பேரூட்டில் இருந்து வெளிவரும் உள்ளக் குமுறல்கள் இவை

பேரூட் வைத்தியசாலைகளில் மருந்து கிடையாது. மின்சாரமோ, தண்ணீரோ கிடையாது. கட்டடங்கள் ஷெல் வீச்சினால் உடைத்து நொறுக்கப்படுகின்றன. மக்கள் இன்று ஒருநாள் வாழ்வதைப் பற்றித்தான் யோசிக்கக்கூடியவர்களாக இருக்கின்றனர்;

நாய்கள் கூட்டம் கூட்டமாக வீதிகளில் ஈயால் மொய்க்கும் குப்பைகளைக் கிளறுகின்றன. பூனைகளின் அளவிலான பெரிய எலிகள் மூலை முடுக்குகளில் எல்லாம் ஓடித்திரிகின்றன.

இலங்கையில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் லெபனானில் தொழில்பார்க்கிறார்கள்.

- கொதிக்கும் சட்டியிலிருந்து எரியும் நெருப்புக்குள் விழுந்த நிலையில் இவர்கள்.

— செய்திலோலன்

## பொதுசன திருமுகம்

### புங்கன்குளம் வீதி

கணக்கர் சந்தியில் இருந்து கண்டி றோட்டை சந்திக்கும் வரையிலான புங்கன்குளம் வீதி குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றது. மழை பெய்தால் மழைநீர் தேங்கி நிற்கிறது. இதனால் சைக்கிள் வண்டி, மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாக வேண்டி இருக்கிறது.

அத்துடன் தற்போது நீண்டதூர சேவையில் ஈடுபடும் இ. போ. ச: தனியார் பஸ் வண்டிகள், லொறிகள் என்பனவும் இப்பாதையாலே தங்கள் சேவையைச் செய்கின்றன:

ஆகவே மழை காலம் ஆரம்பிக்க முதல் இவ்வீதியை நல்ல முறையில் செப்பனிட சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

சதாஸ்ரீகுமாரன்
கொழும்புத்துறை

### போட்டிப் பரீட்சை

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களைத் தெரிவதற்கான போட்டிப் பரீட்சை (1987)க்கென 20-03-87 அரச வர்த்தமானி மூலம் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைய என்போன்ற பலநூறு பரீட்சார்த்திகள் விண்ணப்பித்தோம்;

அத்தனை பரீட்சார்த்திகளில் ஒருவராவது ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படவில்லை.

இது பற்றிக் கல்விச்சேவை ஆணைக்குழுவிற்கு 1988 அக்டோபர் மாதம் என்னைப் போன்ற பலர் ஒப்பமிட்டு தக்க ஆதாரங்களுடன் மேன்முறையீடு செய்து எமது விண்ணப்பங்களையும் இவ் ஆசிரியர் தெரிவில் கவனிக்குமாறு கேட்டிருந்தோம். அதற்கு எமக்கு இதுவரை பதில் எதுவும் பெறப்படவில்லை அண்மையில் தங்கள் பத்திரிகை மூலம் வடமாநில கல்விப்பணிப்பாளர் மேற்குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதங்கள் கிடைத்தவர்கள் தமது திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுள்ளார். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எம்போன்ற வெளிமாவட்டங்களுக்கு விண்ணப்பித்தோரையும் அவர்கள் போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளுக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து நியமனம் தந்து எம்விடயத்திலும் நியாயம் வழங்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்;

கௌரிமனோகரி
ஆறுமுகம்
கொக்குவில்.

### பாதையின் அவலநிலை

கி. பி. 13 ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய பனிக்கன் குன் முத்துமாரி ஆலயத்தில் ஒவ்வொரு வருடமும் ஆனி பௌர்ணமியையொட்டி வரும் தினங்களில் பொங்கல் விழா நடைபெறும்; இவ்வருடம் எதிர்பாராத சூழ்நிலை காரணமாக அத்தினத்தில் நடைபெறாது ஆவணி மாத முதல் திங்களில் இவ் விழா நடைபெறுகிறது. இங்கு செல்லும் அடியார்கள் முன்னைய காலங்களில் இப்பொங்கல் விழாவையொட்டி நடைபெறும் வவுனியா - முல்லைத்தீவு பஸ்களில் சென்று வந்தனர். தற்சமயம் பாதையின் இருமருங்கும் பற்றைக் காடுகளும் பாதையில் படுபள்ளங்கள் குழிகளும் நிறைந்து அடியார்கள் நடந்தே செல்ல முடியாதுள்ளது;

ஒட்டுசுட்டான் நகரை அண்டிய சம்பளங்குளத்திலிருந்து இரண்டு மைல்கள் தூரமான இப்பாதையை வெகு விரைவில் திருத்தியமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வருவார்களா?

இ. சிவச்செல்வன்
ஒட்டுசுட்டான்.

### உப்பு விளைச்சல்

ஆனையிறவுக்கு கிழக்கே உள்ள வண்ணாங்குளம், இயக்கச்சிக்கு அண்மையில் உள்ள கோயில் வயலை அடுத்துள்ள பகுதியிலும் உப்பு விளைந்துள்ளது; (இ-144)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணியின் சமய மெய்யியற் சிந்தனைகளை

# இன்னும் சரியாக மதிப்பிடவில்லை

## பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு தேவை

## யாழ். பல்கலை தமிழ்த்துறைத் தலைவர் உரை

யாழ்ப்பாணம், ஆக. 22 'பண்டிதமணியின் சமய மெய்யியற் சிந்தனைகள் இன்னும் சரியாக மதிப்பிடப்படவில்லை. சைவசித்தாந்த நுணுக்கங்கள் சரியாக இனங்காணப்படவில்லை. இவை பற்றி பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுமேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

இப்படிக் கூறினார் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுவிழாவில் நினைவுப்பேருரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முதலாம் அரங்கு நிகழ்ச்சிகள் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் தலைமையில் நடந்தசமயம் அவர் மேலும் கூறியதாவது:

'கந்தபுராணம் யாழ்ப்பாணக் கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது என்று பண்டிதமணி கண்டார்.

இது சம்பந்தமாக அவர் கொண்டிருந்த சிந்தனைகள் ஆய்வு செய்யப்படவேண்டும். தமிழ்—சைவம் தொடர்பாக பழைமையுடன் புதுமையான கருத்துக்களை வெளியிட்டார்

இப்படி அவர் கூறினார்.

கலைப்பீடாதிபதி நா. பாலகிருஷ்ணன் பேசுகையில், சிந்தனையாளரும், ஞானியுமான பண்டிதமணி மரபுவழி வந்த முதல் இலக்கிய கர்த்தா தனக்கென்று தனியான பரம்பரையை உருவாக்கிய இவரின் பணி தொடர சகலரும் உழைக்கவேண்டும்' என்றார்.

விஞ்ஞான பீடாதிபதிபேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் பேசுகையில் ஆறுமுகநாவலருக்குப்பின்தோன்றி பண்பாட்டுப் பாரம்பரியத்தை வளர்த்தார் தமிழ்பேசும் மக்களின் இதயங்களில் நிரந்தர இடம் பெற்றார் என்றார்.

பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் பேசுகையில், 'பண்டிதமணியின் பெருமையை நாம் நினைவுகூர்வதால் எம்சமயத்தையும் தமிழையும் நினைவுகூருவதாக அமைகிறது. அவரின் கருணையுள்ளம், பெருந்தன்மை எம்மால் மறக்கமுடியாதவை' என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசுகையில் ஈழநாட்டில் தனித்துவமான இலக்கிய பாரம்பரிய வழியை முதலில் கோடிட்டுக் காட்டியவர் பண்டிதமணி. அவை குறித்து பூரணமான ஆய்வு அவசியமானது' என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் பண்டிதர்கள் பழமைகளையே பேசிவருபவர்கள்என்று இருந்த நிலையை பண்டிதமணி பழைமையுடன் புதுமையையும் காட்டிநின்றார்' என்றார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி ஜெபநேசன் பேசுகையில், ஈழத்தமிழ் நாகரீகத்தின் அடிவேரான இவர் ஒரு குழப்பமான சூழ் நிலையில் தோன்றி மரபைக் கட்டிக் காத்து, நாட்டபிமானத்துடன் செயற்பட்டார் 'தாழ்மை' என்ற முக்கிய குறிக்கோளுடன் எல்லோரையும் தழுவி வாழ்ந்தார்' என்றார்.

பண்டிதை வசந்தா வைத்தியநாதன், க. இராசநாயகன், கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், இ. ஜெயராஜ், ஆர். டி. சுப்பிரமணியம் உட்பட பலர் உரையாற்றினர்கள்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் நன்றி கூறினார்.

(இ-3)

மக்கள் முகம்

### காரைநகர் கேணியடி இளைஞர் மன்றம்

யாழ்ப்பாணம், ஆக. 22 காரைநகர் சிதம்பராமூர்த்தி கேணியடி இளைஞர் மன்றத்தின் புத்தாண்டு நிர்வாகிகளாகப் பின்வருவோர் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் — திரு. இ. ஜெயராஜா, உப தலைவர் — திரு. சோ. குமாரசுந்தரம், செயலாளர் — திரு. ப. தவராஜா, உபசெயலாளர் — செல்வன் செ. வரதராஜா, பொருளாளர் — திரு ந உருத்திரன்.

நிர்வாகசபை உறுப்பினர்கள் — செல்வன் அ. விநாயகமூர்த்தி, செல்வன் து. தயானந்தன், செல்வன் வி. ஆறுமுகநாதன், செல்வன் கு. ஜெயகாந்தன் ஆகியோர்.

போஷகர் — திரு. அ. கமலநாதன், கணக்குப் பரிசோதகர்கள் — திரு. வே. இராஜநாயகம், திரு. மா. சிவசுப்பிரமணியம் ஆகியோர்.

(க)

கண்டெடுக்கப்பட்டுள்ள

# தேசிய அடையாளக் கார்ட் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 22 பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட 113 அடையாளக் கார்ட்டுகளில் 47 அடையாளக் கார்ட்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளன. உரியவர்கள் 292/2. நாவலர் வீதியில் உள்ள உதயன் அலுவலகத்துக்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மிகுதி அடையாளக் காட்டுக்களின் விவரம்தொடர்ந்து பிரசுரமாகும்.

1. 647652484 V மரியநாயகம் மேரிகுணஸ்ரின், முரசுமோட்டை
2. 622352923 V வின்சன் ஜோசல் அலெக்ஸ், யாழ்ப்பாணம்.
3. 643512778 V செல்வராசா பாலச்சந்திரன் சேணியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்
4. 666632702 V நடராசா வைபந்திமாலா, உடுத்துறை வடக்கு. தாளையடி.
5. 496582985 V நாகேஸ்வரி கந்தையா, சிறிசுதிரசன வீதி. கொழும்பு - 13
6. 661831901 V சுப்பிரமணியம் கந்தசாமி. கஸ்தூரியார் வீதி, வண்ணார்பண்ணை.
7. 392330305 V இராமநாதர் பாலசுப்பிரமணியம். சுழிபுரம்.
8. 181951109 X தம்பியப்பா சிவானந்தன், வந்தாறுமூலை.
9. 611582366 V சின்னராசா யோகராசா, 5 ஆம் வட்டாரம் சாம்பல்தீவு.
10. 633341176 V முத்தன் வேலாயுதன் லோகேஸ்வரன், தெல்தெனிய.
11. 715090244 V பிரான்சிஸ் சேவியர் பிறிடா நிஷாந்தினி, குருசோல்ட் வீதி, குருநகர்.
12. 490783318 X பள்ளிஸ் அர்னோலிஸ், மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
13. 546861716 V சந்தியோகு ஜெனோவா. இலுப்பைக்குளம், முதலிக்குளம்
14. 603300580 X சிவக்கொழுந்து சுந்தராசன், காங்கேசன்துறை வீ', யாழ்ப்பாணம்
15. 273471332 X கந்தையா விநாயகமூர்த்தி, வெலேகம, களுப்பானை.
16. 472922734 V சிவசுப்பிரமணியம் கேசானந்தம், கொல்பட்டதெனிய வீதி. ஹெந்தலை.
17. 260130773 V கதிரவேலு மாதை, விஜயபுர.
18. 682571551 V அமிர்தநாதன் அல்போன்ஸ் அமிர்தராஜா, சஞ்லோதயா வீதி. பள்ளத்தோட்டம், திருகோணமலை.
19. 536062793 X நித்தியலட்சுமி விஜயராசா, ஸ்ரான்லி வீதி. வண்ணார்பண்ணை
20. 603601092 V முருகுப்பிள்ளை குனேந்திரன், பருத்தித்துறை வீதி. காங்கேசன்துறை
21. 387061258 V விக்னேஸ்வரி சிவபாலன், மின்சார நிலைய வீதி. வண்ணார்பண்ணை
22. 242981080 V விநாயகமூர்த்தி இராசரத்தினம், சநதைக் குறுக்கு வீதி, காங்கேசன்துறை
23. 408630169V அன்னலட்சுமி பொன்னுத்துரை, சுதுமலை தெற்கு.
24. 653570570V சோமசேகரம் ஞானசேகரம், சிவன்பண்ணை வீதி, வண்ணார்பண்ணை:
25. 407961285V நாகேஸ்வரி பூபாலசிங்கம், 613, புதுக்குடியிருப்பு
26. 638642700X ஆறுமுகம் சிவரத்தினபதி, உடையார்கட்டு. விஸ்வமடு.
27. 076920834V குஞ்சாட்சி சின்னத்தம்பி, நெடுந்தீவு கிழக்கு
28. 296210498V சுந்தரீனு அல்பிறட், புங்குடுதீவு மத்தி.
29. 277901510 X வேலு பச்சையம்மாள், டிகான் கலை தோட்டம், ரங்கலை.
30. 262841944V நல்லையா கந்தையா, உருத்திரபுரம், கரைச்சி.
31. 321441297V பொன்னம்பலம் நல்லையா, உடுவில்.
32. 633162948V சிவசுப்பிரமணியம் உதயகுமார், 375, மட்டுவில் தெற்கு. நுணாவில்.
33. 497632650V செல்வத்துரை மகாலட்சுமி, இமையாணன், வல்வெட்டித்துறை
34. 526132483V பரமேஸ்வரி கந்தையா, புத்தூர் மேற்கு, புத்தூர்
35. 562872949V முனுசாமி குமார் இரத்தினம், செபஸ்ரியான் வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்
36. நாகன் செல்லையா, வட்டுக்கோட்டை கிழக்கு. வட்டுக்கோட்டை.
37. 645010558X சோமசுந்தரம் கமலாம்பிகை, டச் வீதி. சாவகச்சேரி.
38. 435880169V புவனேஸ்வரி சுப்பிரமணியம், கோப்பாய் வடக்கு, வலிகாமம் கிழக்கு.
39. 600962825X கிருஷ்ணன் தவராஜா, நவஇலல இடம், தோட்டன்பரிட்ஜ்
40. 457333129V ஜோசப் நிலஸ் ராசநாயகம் பிரிப்ட், தம்புத்தேகம.
41. 702950759V முத்துலிங்கம் கிருஷ்ணகுமார், சேர் பொன். இராமநாதன் றோட், யாழ்ப்பாணம்.
42. 511472385V பரமலிங்கம் சாந்தலிங்கம், புங்குடுதீவு கிழக்கு, புங்குடுதீவு
43. 390100299V அரியகுட்டி மகேந்திரன், சுதுமலை.
44. 511650216V கந்தன் இரத்தினம், மட்டுவில் வடக்கு, தென்மராட்சி.
45. 345802703X தையல் நாயகி நடராசா, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
46. 403390194V சுப்பிரமணியம் திருநவுக்கரசு, மேஜர் லெப்பே வீதி, நாவலப்பிட்டி.
47. 667001897V குமரன் உதயகுமாரி, [illegible] குருநகர்.

(தொடரும்)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

★ கம்பியூட்டர் கல்வி ★

Computer Programming In Basic Language
ஆரம்பம்: 26-08-1989
(சனி, ஞாயிறு வகுப்புகள்)
பயிற்சிக்காலம்: 3 மாதம்

Computer Programming in d Base IV
ஆரம்பம்: 24-08-1989
(செவ்வாய், வியாழன்)
பயிற்சிக்காலம்: 2 மாதம்

சேரும்பொழுது செலுத்த வேண்டியது
ரூ. 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B. M (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். தமிழிலும் விளக்கம் அளிக்கப்படும். பயிற்சி முடிவில் (DIPLOMA) சான்றிதழ்கள் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்கள். ஆகையால் விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுப்பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள் 23-08-1989

UNIKCO
COMPUTER CENTRE
இல. 5 மின்சார நிலைய வீதி,
2-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற்கந்தோர் அருகாமை) (C/3514)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இரத்தினம் உதயசூரியன்

படைப்பு: 06 — 12 — 1957 மறைவு: 22 — 08 — 1986

உதய சூரியனாய் நீயும் வந்தாய்
உள்ளமெல்லாம் வெதும்ப நீ மறைந்தாய்
இதயமுள்ள வரைக்கும் உன் நினைவு
ஒரு போதும் மறையாது வாழ்க ஐயா!

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்:

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புத் தாயார், சகோதரர், மைத்துனி,
பெருமக்கள், மாமாமார்:

வேலணை மேற்கு.
வேலணை. [1578]

## 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### ● திரு. அன்ரனி பிரான்சிஸ் ●

(ஆசிரியர்
மன்னார் புனித சேவியர் கல்லூரி)

ஆண்டவன் படைப்பு 17-09-1930 ஆண்டவன் அழைப்பு: 23-08-1964

நீங்கள் மறைந்து இருபத்தைந்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு அகலா

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 23-08-89 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ் அடைக்கல அன்னை தேவாலயத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்கு கொண்டு இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்:
சகோதர, சகோதரிகள் மனைவி, மகள்,
உற்றார், உறவினர்.

யாபேரும் உங்கள் ஆன்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்

[illegible]
யாழ்ப்பாணம். (1674)

வெளிநாட்டுப் பயணம்

★ அவுஸ்திரேலியா, ஜெர்மனி ★

அடுத்த ஜெர்மனி பயணம்
26. 08. 1989
விரும்புவோர் 21 ஆம், 22 ஆம் திகதிகளில்
நேரில் சந்திக்கவும்.

★ சவூதி அரேபியா:
கிளினேர்ஸ், ஹவுஸ் டிரைவர். காப்பென்ரேஸ்:

★ ஓமான்:
ரெயிலேஸ்

★ குவைத்:
பணிப் பெண்கள், தாதிகள் (Nurses)

தொடர்பு:
திரு. க. இந்திரலிங்கம் (சந்திரன்)
நிரோஷன் என்ரபிறைஸ்
பருத்தித்துறை வீதி. மயிலிட்டி.
காங்கேசன்துறை.
(T. B. வைத்தியசாலைக்கு அருகில்) (1634)

உ

## மூன்றாம் ஆண்டு இதய அஞ்சலி



### செல்வி சத்தியபாமா விஸ்வலிங்கம்

(யாழ் ஹற்றன் தேசிய வங்கி)

அன்னை அணைப்பில்: 03 — 02 — 1956 அன்பன் இணைப்பில்: 25 — 08 — 1986

திதி: 22 — 08 — 1989

தில்லை நடேசன் திருப்பாதம் சேர்வதற்கோ
மல்லல் புகழ் சூரியோடு விரைந்தனை பாமா நீ
அல்லல் நிறை மேதினியில் அர்ப்பணமா? உத்தமியே!
பல்லாண்டு சென்றாலும் மறவோமே உன்வதனம்!

நினைந்து நினைந்துருகும்:
பெற்றோரும், உடன்பிறந்தோரும்,
அத்தான்மாரும், அவர் பிள்ளைகளும்,
அத்தையும், சுற்றத்தவரும்.

ஆனைக்கோட்டை. [1631]

## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



முன்னாள் முல்லை மாவட்ட சபை உறுப்பினரும் கிராம சேவையாளரும் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய முன்னோடி ஆசிரியரும் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும் சமூக சேவையாளருமாகிய

### உயர்திரு. கா. தம்பாபிள்ளை J. P

மலர்வு: 1930 - 06 - 13 உதிர்வு: 1985 - 08 - 22

நினைப் பிரிந்து நாலாண்டு சென்றாலும் நாமும்
நினைப் பிழந்த எந்நாளும் நின்றதில்லை
வினைப்பயனோ வல்விதியோ உமைப் பிரித்தார்
வன்செயலால் எம்மைவிட்டு.
கற்பனைகள், கனவுகள் தான் எத்தனையோ
வைத்திருந்தீர் அவை கனிகின்ற வேளைதனில்
கணப்பொழுதில் எமைப் பிரிந்தீர்
இமைப் பொழுதும் உமை மறவோம்,
இறைவனடி சேர்ந்து நீவிர் இன்புற்றிருந்திடுக!

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

குறிப்பு:- 07 - 09 - 89 இல் வியாழக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெற உள்ள கிரியைகளிலும் மதிய வேளையிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

● தனிப்பட்ட அழைப்புகள் தரமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

[11769]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - நேபாள நெருக்கடி குறித்து ராஜீவ்காந்தி - பிரேந்திரா பேச்சு!

## யூகோ. தலைநகர் பெல்கிரேடில் இடம்பெறும்

புதுடில்லி, ஆக 21

நேபாள - இந்திய நெருக்கடி ஏற்பட்டதன் பின்னர் இருநாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு யூகோஸ்லேவேகிய தலைநகர் பெல்கிரேடில் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இடம் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

அணிசேரா இயக்க நாடுகள் உச்சி மாநாடு பெல்கிரேடில் வருகிற செப்டம்பர் முதல் வாரத்தில் நடைபெறவிருப்பது தெரிந்ததே:

இதில் கலந்து கொள்ள நேபாள மன்னர் பிரேந்திரா செல்கின்ருர். பிரதமர் ராஜீவ் காந்தியும் இம்மாநாட்டில் முக்கிய பங்கு வகிக்க இருக்கிருர்: அப்போது இந்த உச்சி மாநாடு இரு தலைவர்களுக்கு இடையேயும் இடம்பெறலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

வர்த்தக உறவுகள் தொடர்பான உடன்படிக்கை ஒன்று இருநாடுகளுக்கும் இடையே காலாவதியான பின்னர் இரு நாடுகளுக்கும் இடையேயான இராஜந்திர உறவுகளில் நெருக்கடி ஏற்பட்டது:

இந்தியா நேபாளத்துடனை தனது எல்லைகளை மூடியது. நேபாளத்திற்கு அத்தியாவசிய உணவுப்பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவது இதனால் தடுக்கப்பட்டது; இதைத் தொடர்ந்து நேபாளத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதன் பின்னர் பிரதமர் ராஜீவ் - மன்னர் பிரேந்திரா தொடர்பு ஏற்படவில்லை.

அணிசேரா இயக்க உச்சி மாநாட்டின்போதுதான் இரு தலைவர்களும் முதல் தடவையாக சந்தித்துப் பேசவுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நெருக்கடிக்குத் தீர்வு காண இச்சந்திப்பு வழிவகுக்குமா? என்பது சந்தேகமே என்று ராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன. (எ)

## இந்தியாவில் புதிய அரசியல் கட்சி

புதுடில்லி, ஆக 21

ஜனதா தள் கட்சியில் இருந்து வெளியேறிய ஜனுப்: செய்யது ஸகாபுதீன புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்திருக்கிருர்:

அது முஸ்லிம் கட்சியாக அல்லாமல் தேசியக் கட்சியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்: (எ)

## கூடங்குளம் அணு உலைத்திட்டம்; ஆராய மத்திய அரசு முடிவு!

கன்னியாகுமரி, ஆ 21

மதுரை கூடங்குளத்தில் அணு உலை ஒன்றை நிறுவ மத்திய அரசு முடிவு செய்துள்ளது தெரிந்ததே

இதற்கு கூடங்குளம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் மக்களின் எதிர்ப்புப் பற்றி ஆராய கமிட்டி ஒன்றை நியமிக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டிருப்பதாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இக்கமிட்டியில் மாநில அரசின் பிரதிநிதிஒருவரும் இடம் பெறுவார். (எ)

## ★ ஐ.நா. மனித உரிமைக்குழுவில்:

## மனித உரிமை மீறல் புகார் சீனு மீது சுமத்தப்பட்டது!

ஜெனிவா ஆக 21

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் சீனு அரசுக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன;

பீகிங்கில் மாணவர் மீது அடக்குமுறை திபெத் மக்களின் சுதந்திரக் கிளர்ச்சி மீது இராணுவ அடக்குமுறையைப் பிரயோகிப்பது இக்குற்றச்சாட்டுக்களே சீன அரசின் மேல் சுமத்தப்பட்டன; (எ)

## தெரிந்த நாடு தெரியாத விவரம்

## ➤ போலந்து

உத்தியோகப் பெயர்: Polska Rzeczpospolita Ludowa. (Polish People's Republic)

நாட்டின் தலைவர்: ஜனுதிபதி.

அரசின் தலைவர்: பிரதம மந்திரி.

தலைநகரம்: வார்ஸோ (சனத்தொகை 23 லட்சத்து 95 ஆயிரத்து 600. விஸ்தீரணம் ஆயிரத்து 463 சதுர மைல்)

உத்தியோக மொழி: போலீஸ்,

உத்தியோக மதம்: ஒன்றுமே இல்லை

நாட்டின் சனத்தொகை: 3 கோடியே 74 லட்சத்து 55 ஆயிரத்து 7600.

(ஒரு சதுரமைலுக்கு 310 பேர் வீதம் சன அடர்த்தி)

நகரப்புறங்களில் 60.3 சதவீத மக்கள் வாழ்கின்றனர். கிராமப்பகுதிகளில் எஞ்சியோர் வசிக்கின்றனர்.

எதிர்பார்க்கப்படும் சனத்தொகை: 1990 ஆவது ஆண்டில் 3 கோடி 89 லட்சமாகவும் 2000 ஆவது ஆண்டில் 4 கோடி 21 லட்சமாகவும் அதிகரிக்கக்கூடும்.

இனவிகிதாசாரம்: போலீஷ் 98.7%. உக்ரேனியன் — 0.6%

மத விகிதாசாரம்: ரோமன் கத்தோலிக்கர் — 81%. ஏனையோர் வேறு மதத்தினர்:

பிறப்பு விகிதம்: 1000 க்கு 18 பேர் ஆண்டு தோறும் பிறக்கின்றனர். (உலக சராசரி 29 பேர்) இறப்பு விகிதம் 1000க்கு 10பேர் (உலக சராசரி 11பேர்)

வயது: சராசரி ஆண் 67 வயது வரையும் பெண் 75 வயது வரையும் வாழ்கின்றனர்;

உற்பத்தி; விவசாயம், காடுவளர்ப்பு, கடற்றொழில் கால்நடை வளர்ப்பு, சுரங்கத் தொழில் (வெள்ளி, இரும்புக் கனிவளம், ஈயம்; உருக்கு, இரும்பு), எரிபொருள், மசகு எண்ணெய்.

(சனத்தொகையில் 48 6% தீவிர உழைப்பாளிகள்.

தொடர்பு சாதனங்கள்: தினசரிப்பத்திரிகைகள் - 45; (விற்பனை 79 லட்சத்து 60 ஆயிரம் - ஆயிரம் பேருக்கு 215 பேர் பத்திரிகை வாங்குகின்றனர்), வானெலி - 92 லட்சத்து 86 ஆயிரத்து 663 (4 பேருக்கு ஒரு வானெலி) டெலிவிஷன் - 88 லட்சத்து 64 ஆயிரத்து 768 பெட்டிகள் (4 பேருக்கு 1 டெலிவிஷன் வீதம்), தொலைபேசி: 40லட்சத்து 28 ஆயிரம் (9 பேருக்கு ஒரு தொலைபேசி வீதம்)

கல்வி; ஆரம்ப, செக்கண்டரி கல்வி பெறுபவர் - 85.9% மொத்த சனத்தொகையில் 15 வயதுக்கு மேற்பட்டோரில் 99 2 சதவீதமானேர் படிப்பறிவு பெற்றவர்கள்.

சுகாதாரம்: டாக்டர்கள் 71 097; ஆஸ்பத்திரிகளில் படுக்கைகள் - 242, 334 (153 பேருக்கு ஒரு படுக்கை); குழந்தை இறப்பு - ஆயிரத்திற்கு 19

ஆயுதபடை: மொத்த ஆயுதபடையினர் 3 லட்சத்து 19 ஆயிரம்.

இராணுவம் — 65 8%

கடற்படை — 6%,

விமானப்படை — 28 2%

(தகவல்: பிரிட்டானிக்கா)

## பொதுத் தேர்தலைச் சந்திக்க தயார் என்று கலைஞர் அறிவிப்பு!

மதுரை, ஆக.21

தி. மு. க. நாளிதழ் 'முரசொலி' யின் மதுரைப்பதிப்பு வெளியீட்டுவிழா கடந்த வாரம் முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது:

அப்போது திரு: கருணாநிதி பேசியதாவது:

நான் கடிதத்தில் உடன்பிறப்பே என்று எழுதும் போது, கூட்டங்களில் பேசும் போது நீட்டும் உணர்ச்சி வசப்படவில்லை. நானும் உணர்ச்சி பெறுகின்றேன்: களைப்பு நீங்குகிறது: இதயத்தில் வேல்பாய்ந்த புண் மறைகிறது. இதயப்புண்களுக்கு மருந்து கிடைத்தது போல் இருக்கிறது:

### நாடாளுமன்றத் தேர்தல்

வெகுவிரைவில் நாம் சோதனைக் கட்டத்தைச் சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்;

நாடாளுமன்றத் தேர்தல் வரவிருக்கிறது; தி: மு: க. ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று மத்திய அமைச்சர் ப: சிதம்பரம் பேசிஇருக்கிருர்;

தி: மு: க: இரண்டுகால் நாற்காலி; நீண்டநாள் நிற்காதாம். ஏன் இரண்டுகால் நாற்காலி என்கிருர்கள்:

31சதவீத வாக்குகளுடன் நாம் ஆட்சியைப் பிடித்துவிட்டோமாம்; ராஜீவ் என்ன 60 சதவீத வாக்குகள் பெற்று பிரதமரானுர்? 50சதவீதவாக்குகளுக்கும் குறைவாகப் பெற்றுத்தான் அவரும் பிரதமரானுர், ஆகவே அவர்களும் 2கால் நாற்காலிதான்:

இப்படி கலைஞர் பேசினுர்.

(எ)

## விண்வெளியில் வெடித்துச்சிதறிய சோவியத்செய்மதி

கேப்கனவெரல் ஆக. 21

சோவியத் யூனியன் அனுப்பிய உளவுச் செய்மதி ஒன்று கடந்த மாதம் 28 ஆம் திகதி வானவெளியில் வெடித்துச்சிதறியது.

கட்டுப்பாட்டை மீறிய நிலையில் செய்மதி வெடித்தது என்று அமெரிக்காவின் 'ஏவியேஷன் வீக்' சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டது;

தொழில் நுட்பக்கோளாறு காரணமாக செய்மதியை சோவியத் அதிகாரிகளே வெடிக்கவைத்ததாகவும் இச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டது;

கொஸ்மோஸ் - 2030 என்ற இச் செய்மதி கடந்த ஜுலை 12 ஆம் திகதி விண்வெளிக்கு ஏவப்பட்டது:

ஜுலை 18இல் கொஸ்மோஸ் 2031 என்ற செய்மதியை சோவியத் விஞ்ஞானிகள் வானவெளிக்கு அனுப்பினர். (எ)

## ஆப்கன் கெரில்லாக்களிடம் புதிய ரக ரொக்கெட்டுக்கள்

காபூல் ஆக. 21

கெரில்லாக்களின் பலத்த ரொக்கெட் தாக்குதலைத் தொடர்ந்து காபூல் விமான நிலையம் மூடப்பட்டது:

நேற்றுமட்டும் 17 ரொக்கெட் தாக்குதல்களை கெரில்லாக்கல் மேற்கொண்டனர்;

இதனிடையில் - புதுவித ரொக்கெட் மற்றும் ஆயுதங்களை அமெரிக்கா கெரில்லாக்களுக்கு வழங்கியுள்ளது:

இந்த ரொக்கெட்டுக்கள் வானில் வெடித்தவுடன் அவற்றில் இருந்து ஏராளமான குண்டுகள் அப்பிரதேசம் மீது விழுந்து வெடிக்கும்.

அந்த ரொக்கெட்டுக்களைக் கொண்டே கெரில்லாக்கள் இப்போது காபூல் படைகளுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் (எ)


# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,687 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க "ஷப்ரு"வை நாடுங்கள்

நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணரத்ன, சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு. ஜே. டி. நவரட்ணம், (A. I. B. Lond.), பொது முகாமையாளர்

திரு. எஸ். பாலசுப்பிரமணியம் (A. I. B. Lond.), முகாமைப் பணிப்பாளர்

திரு. ஏ. எம். எச். பாரி (B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4 தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

றேடியோ, ரி. வி., திறி இன் வண்: குளிர்சாதனப் பெட்டிகள், இரும்புப் பெட்டிகள், றெக்கோட் பிளேயர், fபான் போன்றவற்றை மலிவு விலையில் வாங்குவதற்கு எம்மை நாடுங்கள்.

★

**பிறைற் ஒக்ஷன் சென்ரர்**
112, 19, 2ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

22 08 · 1989 செவ்வாய்க்கிழமை

அலுமினி, சோக்சேஸ், கட்டில், தொட்டில், கதிரைகள், அயன்பொக்ஸ், பிளண்டர், றேஸிங் சைக்கிள் முதலியன மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

★

**பிறைற் ஒக்ஷன் சென்ரர்**
112, 19, 2ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

## தீர்வு பற்றி ஆலோசிக்க
# நாளை சர்வகட்சி கூட்டம்

கொழும்பு, ஆக. 22

தென்னிலங்கை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கமும், ஏனைய அரசியல் கட்சிகளும் தனித்தனியாக சமர்ப்பிக்கும் யோசனைகளை பரிசீலனை செய்வதற்காக அனைத்து அரசியல் கட்சிகளினதும் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

நாளை புதன்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தில் இக் கூட்டம் நடைபெறும்.

இதுபோன்ற ஒரு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது தலைமையில் நடைபெற்றது.

தகவலறிந்த வட்டாரங்களின் படி, வன்செயல்களை நிறுத்தும்படி சகல போராளி அமைப்புக்களுக்கும் கூட்டாக வேண்டுகோள் விடுவது என்ற தீர்மானத்தை சகல அரசியல் கட்சிகளும் இக் கூட்டத்தில் எடுக்கும் என்று தெரிய வருகிறது.

அந்த கூட்டு வேண்டுகோள் பின்வருமாறு அமையக் கூடும்:

"குறைபாடுகளைத் தீர்க்கவும் அரசியல் இலட்சியங்களை அடையவும் ஆயுதங்களைப் பாவிப்பதையும் வன்செயல்களில் ஈடுபடுவதையும் சகல போராளி அமைப்புக்களும் நிறுத்த வேண்டும்

இந்த அமைப்புக்கள் ஜனநாயக நடைமுறைக்குத் திரும்புவதும் வன்செயல்களை செப்டெம்பர் முதலாம் திகதியுடன் முடிவுக்குக் கொண்டு வரக்கூடியதான பேச்சுக்களை உடனே ஆரம்பிக்க முன்வர வேண்டும்."

- இப்படி அந்த கூட்டு வேண்டுகோள் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இதேவேளை - புதன்கிழமை நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் சமர்ப்பிக்க என்று சகல அரசியல் கட்சிகளும் தனித்தனியாக தேசிய சமாதானத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகின்றன என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வார இறுதியில் தனித்தனியாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூடி இது சம்பந்தமான பேச்சுக்களை ஆரம்பித்தனர்.

தேசிய சமாதானத் திட்டத்தில் இடம்பெறக்கூடிய திடமான யோசனைகளைத் தயாரிக்க முடியவில்லை என்று சில கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்தனர்.

எப்படியாயினும், கடந்த வாரம் ஜனாதிபதி பிரேமதாஸா வெளியிட்ட சமாதான யோசனைகள் குறித்து அரசியல் கட்சிகள் ஏதாவது மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்கக் கூடும் என்று அரசு வட்டாரங்கள் நம்புகின்றன. [உ-எ]

## தென்பகுதி வன்செயல்கள்

தென்பகுதியில் இடம்பெற்ற சில வன்செயல் சம்பவங்கள் வருமாறு:

★ அஹங்கம என்னுமிடத்தில் கனலுவ பாலம் அருகே உள்ள ஆற்றில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் மூன்று சடலங்கள் மிதந்து செல்லக் கண்டுபிடிக்கப்பட்டன.

★ மூன்று சடலங்கள் வெலிகம என்னுமிடத்தில் பத்தவல மயானத்தில் காணப்பட்டன.

★ பூகொடை என்னுமிடத்தில மோட்டார் சைக்கிளில் வந்திறங்கிய இரு நபர்கள் அங்கு நின்றுகொண்டிருந்த பூகொடை விகாரையின் பிரதம நாயக்க தேரரைக் கத்தியால் குத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

★ வெலிமடையில் ரோந்து சென்ற பொலீஸ் ஜீப் மீது இனந்தெரியாதோர் தாக்கினர். அதில் இரண்டு பொலீஸார் காயமடைந்தனர்

### மேலும் பேச்சுக்கள் நடத்த
# இந்தியப் பிரதிநிதி கொழும்பு வருவார்?

புதுடில்லி, ஆக. 22

இந்திய அமைதிப்படை விலகல் விவகாரம் தொடர்பாக இலங்கை அரசுடன் மேலும் ஆலோசனைகளை நடத்துவதற்காக இந்தியப் பிரதிநிதி ஒருவர் கொழும்பு செல்லும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலை சூசகமாக தெரிவித்தார்.

இலங்கையுடன் மீண்டும் ஆரம்பித்துள்ள பேச்சுக்கள் இந்தியாவுக்கு மன நிறைவு தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அப் பேச்சுக்கள் பற்றிய கூட்டறிக்கை எதவும் நிறுத்தி வைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## $2\frac{1}{2}$ கிராம் ஹெரோயின்; இளைஞருக்கு ஆயுள் தண்டனை

இரண்டரைக் கிராம் ஹெரோயின் போதைவஸ்து வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட டொனல்ட் ஹென்றி றஞ்சித் என்ற நபருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமீர் இஸ்மாயில் ஆயுள்காலச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

போதைக் கடத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2 கிராம்களுக்கு மேல் போதைவஸ்து வைத்திருப்போருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கும் அதிகாரம் நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. (உ-எ)

## பாதுகாப்பைப் பலப்படுத்த மேலும் 20 ஆயிரம் பேர்!

கொழும்பு, ஆக. 22

நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக சுமார் 20ஆயிரம் ரிஸர்வ் பொலீஸாரும் ஊர்காவல் படையினரும் இவ்வாரம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக அரசு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள் கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடத்திய உயர்மட்ட மாநாட்டில் இது பற்றிய முடிவு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையிலான தேசியப் பாதுகாப்புச் சபை இன்று (செவ்வாய்க்கிழமை) கூடி நாட்டின் பாதுகாப்பு நிலைமை பற்றி ஆராய உள்ளது. (உ-எ)

உங்கள் வீட்டு மங்கள வைபவங்களுக்குத் தேவையான உபகரணங்கள், கதிரைகள், பீங்கான்-கிளாஸ்-ஜேவகைகளை மலிவு வாடகையில் பெறுவதற்கு

**பிறைற் ஹவுஸ்**

(யாகப்பர் ஆலய அருகாமை)
210, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

(C/3529)

## பேசாலையில் அசம்பாவிதம்

யாழ்ப்பாணம், ஆக. 22

மன்னார் - பேசாலைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த அசம்பாவிதத்தின் போது பொது மக்களில் 16 பேர் காயமடைந்தனர். இவர்கள் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பேசாலையைச் சேர்ந்த அந்தோனி பத்திநாதர் வாசு (வயது 37) என்பவர் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டார். (ஒ-10-9)

## ★ டாக்டர்கள் 'வெளிநடப்பு'

யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் நேற்று திடீரென வெளிநடப்புச் செய்தனர்.

ஆஸ்பத்திரி வளவில் கார்கள் தரிக்கப்படும் இடத்தில் டாக்டர்களின் சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்தன என்றும் —

அந்தச் சைக்கிள்கள் அங்கிருந்து பலவந்தமாக அகற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு ஆட்சேபம் தெரிவித்தே டாக்டர்கள் வெளிநடப்பில் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது

நிர்வாக அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்ட செயலுக்கு மன்னிப்பு கேட்டதை அடுத்து வெளிநடப்பு கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

### சிமெந்து விநியோகம் நிறுத்தப்பட்டதால்
# 5,000 தொழிலாளர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ் மாவட்டத்தில் மின் தடை காரணமாக சிமெந்து உற்பத்தி மற்றும் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடத் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

அன்றாடம் உழைத்து வாழ்ந்துவந்த கட்டடத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப்பட்டுள்ளதால் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

தமக்கு ஏதாவது நிவாரணம் பெற்றுத்தர சமூக சேவை நிறுவனங்கள் முன்வரவேண்டும் என பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள் (ஒ-3

## அரச அலுவலகங்களை மூடும்படி எச்சரிக்கை?

தென்னிலங்கையில் இந்த மாத இறுதி முதல் சகல அரசாங்க அலுவலகங்களையும் செயல் இழக்கச் செய்ய முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாககொழும்பில் நேற்று பரவலாகப் பேசப்பட்டது.

அரச அலுவலகங்களின் சம்பளக் கொடுப்பனவுகள் இந்த வாரத்தில் வழங்கப்பட்டுவருகின்றன;

சம்பளக் கொடுப்பனவுகள் கொடுத்துமுடிந்த கையோடு சகல அரச அலுவலகங்களும் மூடப்படவேண்டும் எனதென்னிலங்கை தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுக்கலாம் என்றும்-

அரசாங்கத்தை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும் கொழும்பில் பேசப்பட்டது.

## மெரினாவில் துப்பாக்கிச் சூடு! 2 இலங்கைத் தமிழர் கைது

சென்னை, ஆக 22

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக இரண்டு இலங்கையர்கள் சென்னையில் மெரினா பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மெரினா கடலில் நின்ற கப்பல் ஒன்றில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் காசிமேடு பகுதியைச் சேர்ந்த புஷ்பலிங்கம் என்ற மீனவர் காயமடைந்தார்.

சந்தேகத்தின்பேரில் பிரேம்குமார், காந்தரூபன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். (உ-எ)

## அல்வாய் வியாபாரி மூலையில்....

யர். இரண்டு பிள்ளைகளின் தந்தை. நாவலடியைச் சேர்ந்தவர்.

● நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம் (வயது 50) பருத்தித்துறை காணி அலுவலக எழுதுவினைஞர். இரு பிள்ளைகளின் தந்தை. நாவலடியைச் சேர்ந்தவர்.

● கந்தையா நந்தபாலன் (வயது 25) நாவலடியைச் சேர்ந்தவர்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களை மந்திகை ஆஸ்பத்திரியில் கடமை புரியும் பிரெஞ்சு டாக்டரான செல்வி ஜெக்குலின் தலைமையிலான வைத்தியகுழு வாகனம் மூலம் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்த்தது.

இப்பகுதியில் பல கடைகள் எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது; எனினும் பதற்றம் மற்றும் கெடுபிடி காரணமாக மக்கள் அப் பகுதிக்குச் செல்லமுடியாது இருந்ததால் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

நேற்று பிற்பகல் வரை பஸ் போக்குவரத்தும் இப்பகுதியில் நடைபெறவில்லை.

இச்சம்பவத்தை அடுத்து கொற்றவத்தை, பூமாஞ்சோலை, மாணாண்டி, வியாபாரி மூலை திக்கம், அல்வாய், வதிரி, மாலிசந்தி பகுதிகளைச்சேர்ந்த மக்கள் பீதிகாரணமாக இடம்பெயர்ந்தனர்; (உ-160

## மானிப்பாய் வங்கியில் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக. 22

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் நாளை புதன்கிழமை சங்கானை வடக்கு வடலியடைப்புபகுதியைச் சேர்ந்த 502 குடும்பங்களுக்கு (J/68) மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது. (இ)

## மீனவர்களை காணவில்லை

மாங்குளம் ஆக. 22

கடந்த ஆறும் திகதி முல்லைத்தீவு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் இருவர் இன்னும் கரை திரும்பவில்லை.

முல்லைத்தீவு வண்ணான்குளத்தைச்சேர்ந்தகஸ். பரமசிவம், கைத்தாம்பிள்ளை ஆகியோரே அந்த இருவரும் ஆவர். (ஓ-94)

## ஏழாலை மேற்கு மக்களுக்கு நிவாரணம்!

யாழ்ப்பாணம், ஆக 22

மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஏழாலை மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 502 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரணப் பணம் வழங்கப்பட இருக்கிறது

சம்பந்தப்பட்டவர்கள் கிராம சேவையாளருடன் தொடர்புகொண்டு தமது தொடர் இலக்கங்களைப் பெற்று வருமாறு வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ)

## தெற்குப் பிரச்சினையை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறவில்லை நான் யதார்த்த நிலையையே அதிகமாக கடைப்பிடிப்பவள். பேச்சுக்கள்மூலம் தான் அமைதிப்படை திரும்புவதற்கு வழி காணவேண்டும்.

ஓர் இனத்தின் உரிமையை இன்னோர் இனத்திற்கு அடகு வைக்காமல் — தீவிரவாதிகள் மற்றும் மிதவாதிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய — வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

தமிழருக்கு அதிகாரப் பரவலாக்கல் வழங்கப்படவேண்டும் தான்; ஆனால் இப்போது வழங்கப்பட்டது போன்றல்ல;

இன்று மாகாணசபை உறுப்பினர்களும் எம்.பிக்களும் ஒருவரை ஒருவர் மிதித்து நடக்கும் அளவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பெறுபேறு என்ன? ஒரு வேலையும் நடைபெறுது என்பது தான்.

கேள்வி: தேசிய அரசுபற்றி பேசப்படுகிறதே! இன்றைய பிரச்சினைக்குத் தீர்வு காண இது உதவுமா?

சிறிமாவோ: தற்போது அரசியலில் இல்லாத ஒருவர்தான் தேசிய அரசுபற்றி பேசி வருகிறார்; அவரின் யோசனையைத் தான் வெளியுறவு அமைச்சர் ஹமீத் தள்ளிவிட்டாரே!

கேள்வி: ஜே.வி.பி மீதான இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டால், அவர்கள் ஜனநாயகநடைமுறையில் சேர்ந்து கொள்வதற்கான உகந்த சூழ்நிலை உருவாகும் என்று கூறப்படுவது பற்றி ......

சிறிமாவோ; வன்செயல் நிறுத்தம் என்பது இரு தரப்பினரும் பரஸ்பரம் ஏற்றுக்கொண்டதாக இருக்க வேண்டும். இது ஒருதலைப்பட்சமாக இருக்கமுடியாது;

கேள்வி: தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள நாடாளுமன்றத்தைக் கலைத்து நீதியான — சுதந்திரமான — பொதுத் தேர்தல் நடத்தப்படும்வரை சகல அரசியல் கட்சிகளும் பங்குபற்றும் காபந்து அமைச்சரவை ஒன்றை நியமிப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அதுதானே ஜேவிபியின் கோரிக்கையும்?

சிறிமாவோ: ஜனாதிபதி பிரேமதாசா தலைமையிலான இடைக்கால நிர்வாகமாக இது இருக்கக்கூடாது. யாரோ ஒருவர் தலைமை வகிக்கக்கூடிய இடைக்கால அமைச்சர்கள் அவையாக இது அமைய வேண்டும். தலைமை வகிப்பவரின் பணி, தலைமை வகிப்பதுடன் முடிந்துவிட வேண்டும்;

கேள்வி: தென்இலங்கையில் வன்செயல்கள் கொழுந்து விட்டெரியக் காரணம் இந்திய-இலங்கை ஒப்பந்தமும் அமைதிப்படை பிரசன்னமும் தான் என்று கூறப்படுகிறதே;

சிறிமாவோ: தென்இலங்கையில் நீடிக்கும் வல்செயல்களுக்கான காரணங்களில் இதுவும் ஒன்று! இது மட்டும் காரணமல்ல; (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா குமாரதேவன்

மலேசியாவை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரதேவன் 16 - 8 - 89 அன்று காலமானார் அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் கந்தையா சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வனும், கருணாதேவி (லண்டன்) யின் அன்புக்கணவரும், செந்தில்குமாரின் (லண்டன்) அன்புத் தந்தையும், செல்வராஜா (சிங்கப்பூர்), செல்வசரஸ்வதி, மனோரஞ்சிதம், பரஞ்சோதி (லண்டன்), ஆகியோரின் சகோதரனும், தங்கலட்சுமி (சிங்கப்பூர்) காலஞ்சென்ற அருலம்பலம், காலஞ்சென்ற கதிரேசம்பிள்ளை, மதிவதனநாயகி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ஸ்கந்தராஜா (லண்டன்), சாமினி [சிங்கப்பூர்], அருள்ராஜன் (லண்டன்), அருள்சாந்தினி, தியாகராஜா [கனடா], கீதா சிவானந்தன் (ஜேர்மனி), லதா, ராகினி சுதா ஆகியோரின் மாமனும் ஆவார் அன்னாரின் பூதவுடல் லண்டனில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;
செல்வசரஸ்வதி.

கைதடி மேற்கு.
கைதடி.

(1675)

### திரு. வேலுப்பிள்ளை செல்லையா
[பரந்தன்]

சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பரந்தனில் வசித்தவருமான திரு. வேலுப்பிள்ளை செல்லையா அவர்கள் 19-08-1989 சனிக்கிழமை பிற்பகல் காலமாகிவிட்டார்.

இவர் கமலாவதி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கமுத்து, செல்லாச்சி, மாணிக்கம், திரு. வே. கந்தையா, காலஞ்சென்ற வல்லிபுரம் (ஈஸ்வரன் தியேட்டர், கிளிநொச்சி), திருமதி முத்துப்பிள்ளை, திரு. வே. சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோரஞ்சிதம்மா சுப்பையா, செல்வநாயகி நாகரத்தினம், பேராயிர உடையார், காலஞ்சென்ற சிவலோகநாதன், தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவச்செல்வன் (அமெரிக்கா), லீலாதேவி, வசந்தாதேவி, சாந்தாதேவி, மல்லிகாதேவி (லண்டன்), அஞ்சலாதேவி (சவுதி), ரஜனி (லண்டன்), சுகந்தினி (லண்டன்), சிவதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சி. சர்வாங்கினி (அமெரிக்கா), ஸ்ரீபத்மநாதன் (சவுதி), ஜெயக்குமார் (அல்ஜீரியா), பொன்னம்பலம் (பரந்தன்), காலஞ்சென்ற பொன்னம்பலம் (C. E. B.), உருத்திரகுமார் (டென்மார்க்), திவ்வியகுமார் (சவுதி), Dr. சிவயோகநாதன் (லண்டன், Dr. ஸ்ரீஸ்கந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலமுரளி (சென். ஜோன்ஸ்), பிரகலதா (சுண்டிக்குளி மகளிர்), கிருஸ்ணி (சுண்டிக்குளி மகளிர்), கோபிநாத் (சென் ஜோன்ஸ்), கிருஸ்ணரூபன் (சென். ஜோன்ஸ்), துளசினி, ஜனகன், தர்ஷினி, பிருந்தினி, தாமரா, கீர்த்தனா, தக்ஷனா, சாருண்யா, லவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்;

அன்னாரின் ஈமக்கிரியைகள் தபால் நிலைய வீதி, சாவகச்சேரியிலுள்ள அவரின் இல்லத்தில் 23-08-1989 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்;

தகவல்,
வி. ஜெயக்குமார்
(மருமகன்)

இல. 20, தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி;

(1577)

இப் பத்திரிகை திரு உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 22-8-1989 இல் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org